**கவனிக்க**.- *2010.02.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1641 - 2010 පෙබරවාරි 12 වැනි සිකුරාදා - 2010.02.12

*1641 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 472 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## தென் மாகாண சபை

*தென் மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதி (குறை நிரப்பி ஏற்பாடுகள்) (திருத்த) நியதிச்சட்டம்*

*தென் மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கமுடைய (நிதி குறை நிரப்பி ஏற்பாடுகள்) (திருத்த) நியதிச் சட்டம் தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற 2008.12.22 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை தென் மாகாண முதலமைச்சரும் நிதியமைச்சருமாகிய குஸ்திஞ்ஞாவடு ஷான் விஜயலால் த சில்வா ஆகிய நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*குஸ்திஞ்ஞாவடு ஷான் விஜயலால் த சில்வா,*
*தென் மாகாண சபையின்*
*முதலமைச்சரும் நிதியமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*தென் மாகாணம்,*
*காலி,*
*2009, திசெம்பர் 21.*

### தென் மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதி (குறை நிரப்பி ஏற்பாடுகள்) (திருத்த) நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகிறது :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

1. இந்நியதிச்சட்டம் தென் மாகாண மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதி (குறை நிரப்பி ஏற்பாடுகள்) (திருத்த) நியதிச்சட்டமென அழைக்கப்படுவதுடன் அது ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி யிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*தென் மாகாண த்தின் மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (குறை நிரப்பி ஏற் பாடுகள்) நியதிச் சட்டத்தின் 1 ஆம் பந்தியை திருத்துதல்.*

2. தென் மாகாணத்தின் மாகாண சபையின் (இதனகத்துப் பின்னர் ''முதன்மை நியதிச் சட்டம்'' என அழைக்கப்படும்). 1994 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (குறை நிரப்பி ஏற்பாடுகள்) நியதிச் சட்டத்தின் 1 ஆம் பந்தியின் 7 ஆம் இலக்கத்துக்கு அடுத்து 8 ஆம் இலக்கமிட்டு இதற்கு ''குதிரை பந்தய கட்டளைச்சட்டம்'' என அப்பந்தி இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ எனும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

3. 6 ஆம் முதன்மை சட்டத்தில் உடனடுத்து பின்னர் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது என்பது அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

*காணி மற்றும் கட்டிடம் என்ப வற்றுக்கான வரி.*

6அ. (1) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களினால் அனுமதிக்கப்படும் வீதங்களுக்கு அமைய வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் வரியொன்று மாகாணத்துக்குள் அமைந்திருக்கும் ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் மீது அத்தகைய காணியின் அல்லது கட்டிடத்தின் மூலதனப் பெறுமதியின் மீது கணிக்கப்படக்கூடியவறான அத்தகைய வீதங்களில் விதிக்கப்படலாம்.

(2) 1 ஆம் பிரிவின் ''காணி'' எனக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதம் முடிக்குரிய காணிகளை உள்ளடக்குதல் வேண்டும். அத்துடன் ''கட்டிடம்'' என்ற பதம் அரசாங்கத்துக்கு சொந்தமான ஏதேனும் கட்டிடத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) 1 ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் அங்கீகாரத்துக்கென மாகாண சபை முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத கட்டளை எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாத தேதியில் இருந்து இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) ஏதேனும் கட்டிடம் தொடர்பில் ''மூலதனப் பெறுமதி'' என்ற பதம் பயன்படுத்தப்படும்போது அத்தகைய கட்டிடத்துக்குச் செய்யப்படும் திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகள் அதில் பொருத்தப்படும் எவையேனும் பொருத்திகள் உட்பட அதன் நிர்மாணச் செலவு அத்துடன் அத்தகைய கட்டிடம் எத்தகைய காணி மீது அமைந்திருக்கிறதோ அக்காணியின் பெறுமதி எனக் பொருள்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஒரு வெறும் காணி தொடர்பில் பயன்படுத்தப்படும்போது முற்போந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று நிலவிய அத்தகைய காணியின் சந்தைப் பெறுமதி எனப் பொருள்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள் அமைச்சரினால் நியமிக்கப்படும் அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் VI எனும் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய அத்தியாயம் உட்புகுத்தப்படுகின்றது. அத்துடன் அது முதன்மையாக்க நியதி சட்டத்தின் VII அத்தியாயமென வலுப்படுத்தப்படல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் VII எனும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்தல்.

**அத்தியாயம் VII**

***பந்தய வரி***

13. (1) (இதனகத்துப் பின்னர் ''பந்தய வரி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று (இலங்கையிலோ வெளிநாட்டிலோ நடாத்தப்படும்) குதிரை ஓட்டப் பந்தயத்தின் மீது மாகாணத்திற்குள் உள்ள ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் காசாகவோ அல்லது கடனாகவோ வைக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் பந்தயங்களின் மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் அறவிடப்படுதல் வேண்டும். அத்துடன் விதிக்கப்படுதல் வேண்டும்.

பந்தய வரி

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன் அது அவ்வாறு வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் அங்கீகாரத்துக்கென மாகாண சபையின் முன் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும் அத்துடன் அவ்வாறு அங்கீகாரமளிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாத தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாக கருதப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அறவிடப்படும் பந்தய வரி அத்தகைய பந்தயம் வைக்கப்பட்டதற்கு உடனடுத்துப் பின்னர் விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு ஆளான ஆள் அத்தகைய வரியை அத்தகைய வரி எத்திகதியன்று பெறுமதியாக வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஒரு பஞ்சாங்க மாதம் முடிவடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் மாகாண அரசிறை ஆணையாளருக்கு மொத்தமாகச் செலுத்துதல் வேண்டும்.

(4) பந்தய வரியை 3 ஆம் உட்பிரிவில் குறித்து உரைக்கப்பட்டுள்ளவாறு செலுத்தப்படவேண்டிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்துவதற்கு ஆளான ஆளொருவர் அத்தகைய வரியைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து அத்தகைய ஆள் தவறுகை புரிந்தவறாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் பந்தய வரியின் கொடுப்பனவில் தவறுகை புரியப்பட்டிருக்கின்றவிடத்து தவறுகை புரிந்தவர் அவ்வாறு தவறுகையை புரியப்பட்டிருக்கின்ற தொகையின் 10 சதவீதத்துக்கு சமனான குற்றப் பணமொன்றை செலுத்துதல் வேண்டும். அத்துடன் தொடர்ந்து புரியப்படும் தவறுகை ஒன்றின் விடயத்தில் அத்தகைய தவறுகை தொடர்கின்ற ஒவ்வொரு மாதத்திற்கும் தவறுகை புரியப்பட்ட பணத்தொகையின் ஆகக்கூடிய 50 சதவீதமொன்றுக்கு அமைய 2 சதவீதத்துக்கு குறையாத மேலதிக குற்றப்பணமொன்றை செலுத்துதல் வேண்டும்.

(6) 5 ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குற்றப்பணத்தை உள்ளடக்கிய பந்தய வரியொன்றின் கொடுப்பனவில் தவறுகை புரியப்பட்டிருக்கின்றவிடத்து அது மாகாண சபைக்கு வருமதியான தனிசு ஒன்று என்றாற் போன்று அறவிடப்படலாம்.

(7) இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தொழில் எதுவும் சட்டவிரோதமான தொழிலொன்றாக இருந்தால் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தொழிலுக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

*முதன்மைச் சட்டவாக்கம் VIII ஆம் அத்தியாயத்தை மீள இலக்கமிடல்.*

5. முதன்மைச் சட்டவாக்கம் VII ஆம் அத்தியாயத்தை VIII ஆம் அத்தியாயமாக மீள இலக்கமிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கம் 13, 14 மற்றும் 15 ஆம் பிரிவுகளுக்கு மீள இலக்கமிடல்.*

6. முதன்மைச் சட்டவாக்கம் "13, 14 மற்றும் 15 ஆம் பிரிவுகளை" முறையே 14 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

7. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-256

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.